கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 126 | 11-11-2025 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 126 | 11-11-2025 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## உத்தராகண்ட் வெள்ளி விழா: ரூ.8,260 கோடியில் திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கினார்




டேராடூன்: நவ.11–

உத்தராகண்ட் மாநிலம் உதயமாகி 25 ஆண்டுகள் ஆனதை முன்னிட்டு, அங்கு ரூ.8,260 கோடிக்கும் மேற்பட்ட வளர்ச்சி திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.


உத்தராகண்ட் மாநிலம் உதயமாகி 25 ஆண்டுகள் ஆகிவிட்டது. இதன் வெள்ளி விழாவை முன்னிட்டு அங்கு அவர் ரூ.930 கோடிக்கும் மேற்பட்ட திட்டங்களை தொடங்கி வைத்தார். ரூ.7,210 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இவற்றில் குடிநீர் , நீர்ப்பாசனம், தொழில்நுட்பக் கல்வி, எரிசக்தி, நகர்ப்புற வளர்ச்சி, விளையாட்டு மற்றும் திறன் மேம்பாடு ஆகிய திட்டங்கள் அடங்கியுள்ளன.

பிஎம் ஃபசல் பீமா யோஜனா திட்டத்தின் கீழ், 28,000க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு ரூ.62 கோடியை நிதியை அவர்களின் வங்கி கணக்கில் செலுத்த விடுவித்தார். பிரதமர் தொடங்கிய திட்டங்கள் மூலம் டேராடூனில் 23 மண்டலங்களுக்கு அம்ருத் திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகிக்கப்படும். பிதோராகர் மாவட்டத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படும்.

அரசு கட்டிடங்களில் சூரிய மின் சக்தி தகடுகள் பொருத்தப்படும். நைனிடாலில் உள்ள ஹல்த்வானி அரங்கத்தில் செயற்கை புல் ஹாக்கி மைதானம் அமைக்கப்படும்.

டேராடூனில் நாள் ஒன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகிக்கும் வகையில் சாங் அணை திட்டத்துக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார். நைனிடாலில் தொடங்கப்பட்ட ஜமாராணி அணை திட்டம் மூலம் குடிநீர், நீர்ப்பாசனம் ஆகியவை வழங்கப்படும் மற்றும் மின் உற்பத்தி செய்யப்படும். சம்பவாட் பகுதியில் துணை மின்நிலையங்கள், பெண்கள் விளையாட்டு கல்லூரி உட்பட இதர திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது.

## டெல்லியில் உடல் உறுப்புகளை தானம் செய்வதற்காக இறந்த பெண்ணின் உடலில் ரத்த ஓட்டம் கொண்டு வந்த டாக்டர்கள்



புதுடெல்லி: நவ.11–

டெல்லியில் உறுப்புகளை தானம் செய்வதற்காக இறந்த பெண்ணின் உடலில் மீண்டும் ரத்த ஓட்டத்தை கொண்டு வந்து மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

டெல்லி துவாரகா பகுதியை சேர்ந்தவர் கீதா சாவ்லா (55). நரம்பியல் கோளாறு காரணமாக பக்கவாதம் ஏற்பட்டு படுத்த படுக்கையாக இருந்தார். கடந்த 5ம் தேதி அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. இதையடுத்து துவாரகாவின் எச்எம் சிடி மணிப்பால் மருத்துவமனையில் கீதாவை சேர்த்தனர். அங்கு அவருடைய உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. அவர் உயிர்ப் பிழைக்க வாய்ப்பில்லை என்ற நிலை ஏற்பட்டது. இதையடுத்து வென்டிலேட்டர் போன்ற உயிர்க் காக்கும் கருவிகள் உதவியுடன் கீதாவை வைத்திருக்க அவரது குடும்பத்தினர் விரும்பவில்லை. பின்னர் நவம்பர் 6ம் தேதி இரவு கீதா உயிரிழந்தார்.

ஆனால், தனது உறுப்புகளை தானம் செய்ய வேண்டும் என்று கீதா கடைசி ஆசையை தெரிவித்திருந்தார். அதன்படி, அவரது உறுப்புகளை தானம் அளிக்க முடிவெடுக்கப்பட்டது. இதையடுத்து, கீதாவின் உடலுக்கு பிரேதப் பரிசோதனையின்போது மருத்துவர் குழுவினர் மிகவும் சிக்கலான மற்றும் அரிதான செயலை செய்தனர். கீதாவின் வயிற்றுப் பகுதியில் உள்ள உறுப்புகளை எடுத்து தானம் செய்வதற்காக, அந்தப் பகுதியில் மீண்டும் ரத்த ஓட்டத்தை கொண்டு வந்தனர். இதை நார்மோதெர்மல் ரீஜினல் பர்பியூஷன் (என்ஆர்பி) செயல்முறை என்கின்றனர். இதன்படி மருத்துவர்கள் வெற்றிகரமாக கீதாவின் வயிற்றுப் பகுதியில் உள்ள உறுப்புகளுக்கு ரத்த ஓட்டத்தை கொண்டு வந்தனர். பின்னர் அந்த உறுப்புகள் எடுக்கப்பட்டு தானமாக வழங்கப்பட்டன. இதயம் செயலிழந்த 5 நிமிடத்துக்கு பிறகு கீதாவின் உயிர் பிரிந்துவிட்டது என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஆசியாவிலேயே இதுபோல் இறந்த பெண்ணின் உடலுக்கு ரத்த ஓட்டத்தை கொண்டு வந்து உறுப்புகளை எடுத்த மருத்துவ நடைமுறை டெல்லி மணிப்பால் மருத்துவமனையில்தான் நடந்துள்ளது என்று மணிப்பால் இன்ஸ்டிடியூட்டின் தீவிர சிகிச்சைப் பிரிவின் தலைவர் ஸ்ரீகாந்த் ஸ்ரீனிவாசன் கூறினார்.

இந்தியாவில் இதயம் இயங்கினாலும், மூளை சாவு அடைந்தவர்களின் உடல் உறுப்புகள்தான் தானம் வழங்கப்படுவது வழக்கம். ஆனால், இதயம் செயலிழந்து ரத்த ஓட்டம் நின்ற பிறகு உறுப்புகளை பாதுகாப்பது சிக்கலானது. இதில் நேரம் மிகமிக சிக்கலானது. ஆனால், என்ஆர்பி நடைமுறையை பயன்படுத்தி இதயம் நின்ற பிறகும் உடனடியாக ரத்த ஓட்டத்தை கொண்டு வந்து அவருடைய கல்லீரல், சிறுநீரகம் போன்ற உறுப்புகளை பாதுகாத்தோம் என்று அவர் தெரிவித்தார்.

இதையடுத்து, கீதாவின் உறுப்புகளை உடனடியாக வேறு நோயாளிகளுக்குப் பொருத்துவதற்கான ஏற்பாடுகளை தேசிய உறுப்பு மற்றும் திசுக்கள் மாற்று அமைப்பு ஏற்பாடு செய்தது. அதன்படி கீதாவின் கல்லீரல் ஐஎல்பிஎஸ் மருத்துவமனையில் 48 வயது ஆணுக்கும், 2 சிறுநீரகங்கள் மேக்ஸ் மருத்துவமனையில் 2 ஆண்களுக்கும் பொருத்தப்பட்டன. கீதாவின் கருவிழிகள், தோல் கூட தானம் செய்யப்பட்டது.

இதுகுறித்து மணிப்பால் மருத்துவமனை டாக்டர் அவினாஷ் சேத் கூறும்போது, ''தற்போது ஆசியாவிலேயே முதல் முறையாக ரத்த ஓட்டத்தை மீண்டும் கொண்டு வந்து உறுப்புகள் பத்திரமாக எடுக்கப்பட்டதால், எதிர்காலத்தில் இறந்த பிறகும் உறுப்பு தானம் வழங்குவது சாத்தியமாகும்'' என்று தெரிவித்தார்.

# தமிழகத்தில் மூத்த குடிமக்களுக்காக 25 'அன்புச் சோலை' மையங்கள் திறப்பு

### திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.



சென்னை: நவ.11–

மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, 25 'அன்புச் சோலை' மையங்களை திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழக முதல்வர் ஸ்டாலின் நேற்று (நவ.10) திருச்சி, பொன்மலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக 'அன்புச் சோலை' மையங்கள் ஒரு மாநகராட்சியில் இரண்டு வீதம் 10 மாநகராட்சிகளில் 20 மையங்கள்,சென்னை பெருநகராட்சியில் 3 மையங்கள் மற்றும் தொழில் மாவட்டங்களான ராணிப்பேட்டை மற்றும்கிருஷ்ணகிரியில் 2 மையங்கள் என மொத்தம் 25 'அன்புச் சோலை' மையங்களை தொடங்கி வைத்தார்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலமாக குழந்தைகள், மகளிர், கல்வி பயிலும் மாணவ, மாணவியர், திருநங்கைகள் மற்றும் முதியோர் அனைவரையும் பேணிக் காக்கும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் சட்டங்கள் இத்துறையின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட முதியோர்களுக்காக முதியோர் இல்லங்கள், ஒருங்கிணைந்த வளாக இல்லங்கள், நடமாடும் மருத்துவ அலகுகள் மற்றும் ஓய்வூதியத்திட்டங்கள் உள்ளிட்ட மூத்த குடிமக்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. முதியவர்கள் அமைதியான, கண்ணியமான மற்றும் நிறைவான வாழ்க்கையை நடத்துவதை உறுதி செய்து, அத்தியாவசிய வசதிகளை வழங்குவதே இத்திட்டங்களின் நோக்கம் ஆகும்.

மூத்த குடிமக்களுக்கான 'அன்புச் சோலை' மையங்கள்: தமிழகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் மூத்த குடிமக்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை உறுதி செய்வதற்காக ஒரு மாநகராட்சியில் இரண்டு அன்புச் சோலைகள் வீதம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய 10 மாநகராட்சிகளில் 20 அன்புச் சோலைகள் அமைக்கப்படுகின்றன.

மேலும், 2 தொழில் துறை மாவட்டங்களான ராணிப்பேட்டை மற்றும் கிருஷ்ணகிரி, பெருநகர மாநகராட்சியான சென்னையில் தண்டையார் பேட்டை, சோழிங்கநல்லூர் மற்றும் விருகம்பாக்கம் ஆகிய மூன்று இடங்களில் 'அன்புச் சோலை' மையங்கள் தொடங்கப்பட்டு, இயன்முறை மருத்துவ சேவைகள் (Physiotherapy), யோகா, பொழுது போக்கு அம்சங்கள் மற்றும் நூலகம் போன்றவை வழங்கப்படவுள்ளன.

அன்புச் சோலையின் முக்கிய நோக்கங்கள்: முதியோருக்கு வழங்கப்படும் இயன்முறை மருத்துவ சேவைகள், பொழுது போக்கு, திறன் மேம்பாடு நிகழ்வுகள் மூலம் மனமும், உடலும் சுறுசுறுப்புடன் இருக்கச் செய்தல், முதியோர் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு, சமூக உறவுகளை வலுப்படுத்துதல், ஆண், பெண் இருவரும் வேலை பார்க்கும் குடும்பங்களுக்கு, அவர்களது மூத்த உறுப்பினர்கள் பாதுகாப்பாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு அன்புச் சோலை மையங்கள் செயல்படும்.

அன்புச் சோலையின் சமூக நோக்கம்: அன்புச் சோலை திட்டமானது, முதியோர்களை போற்றும் தமிழ் பாரம் பரியத்தை பிரதிபலிப்பதோடு, முதியோர்களின் பாதுகாப்பையும், நன்முறையில் பராமரிப்பதையும் உறுதி செய்வதால் அவர்களது குடும்பத்தினருக்கு மன அமைதியை ஏற்படுத்துகிறது. இதனால் முழுமையான நிறுவனம் சார்ந்த பராமரிப்பு தேவையை குறைத்தும், குடும்ப பிணைப்பை வலுப்படுத்தவும் உதவுகிறது.

மேலும், வேலைக்கு செல்ல ஆர்வமுள்ள பெண்கள், தங்கள் வீட்டிலுள்ள முதியோர்களை பகல் நேரங்களில் பராமரிக்க இயலாததால் வேலைக்கு செல்ல இயலாத நிலையுள்ளது. எனவே, வேலைக்கு செல்லும் பெண்களுக்காகவும், வேலைக்கு செல்ல ஆர்வமுள்ள பெண்களுக்காகவும், அவர்களது வீட்டு முதியவர்களுக்கு தனிமையில்லாமல் நேரத்தை சிறந்த முறையில் செலவு செய்து, மகிழ்வாக வாழ வழிவகை செய்யும் நோக்கத் தோடும் இம்மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக திருச்சியில் இன்றைய தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில், 25 அன்புச் சோலை மையங்களை காணொலி வாயிலாக முதல்வர் தொடங்கி வைத்து, மூத்த குடிமக்களுக்கு மகளிர் சுய உதவிக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட சிறு தானிய உணவு வகைகள் மற்றும் சத்துமாவு கொண்ட பெட்டகங்களை வழங்கி, அவர்களுடன் கலந்துரையாடி, கேரம் விளையாடினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, ரகுபதி, கீதா ஜீவன், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, துரை வைகோ, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மீனவர்களின் நலனுக்காக 'தனி கார்ப்பரேஷன்' அமைக்க வலியுறுத்தப்படும்: ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தலைவர் உறுதி

திருச்சி: நவ.11–

இந்தியா இலங்கை மீனவர்களின் நலனுக்காக 'மீனவர் கார்ப்பரேஷன்' அமைப்பது குறித்து இலங்கை நாடாளுமன்றத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வலியுறுத்தும் என அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறினார்.

இலங்கையில் இருந்து திருச்சிக்கு விமானத்தில் நேற்று வந்த அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இலங்கை அரசின் வரவுசெலவு திட்ட விவாதம் நாடாளுமன்றத்தில் அண்மையில் தொடங்கியுள்ளது.

இந்த விவாதம் ஒரு மாதம் நடைபெறும். மீனவர்கள் குறித்த விவாதம் நடைபெறும் நாளில் இந்தியா இலங்கை மீனவர்கள் நலனுக்காக 'மீனவர் கார்ப்பரேஷன்' அமைக்க வேண்டும் என்று எங்கள் கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் விரிவாகப் பேசுவார்கள்.

மீனவர் கார்ப்பரேஷன் அமைப்பது என்பது, மீனவர் பிரச்சினைகளைக் களைய இருதரப்பும் கூட்டாக செயல்படுவதற்கான யோசனையாகும். இந்த யோசனையை இருதரப்பும் ஏற்றுக்கொண்டால், தேவையற்ற பூசல்கள், பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும் என நம்புகிறோம்.

இலங்கையின் புதிய அரசால் 2வது முறையாக வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஒரு மோசமான பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீண்டுவிட்டதற்கான அறிகுறி, இந்த வரவு செலவு திட்டத்தில் தெளிவாக வெளிப்பட்டுள்ளது. மைனஸ் 7 சதவீதமாக வீழ்ந்துகிடந்த பொருளாதாரம், பிளஸ் 4.5 சதவீதமாக வளர்ந்துள்ளது.

இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா அண்மையில் இந்தியா வந்து ஆளுங்கட்சி, எதிர்க்கட்சித் தலைவர்கள், மத்திய அமைச்சர்களை சந்தித்தது இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையேயான நட்புறவை வலுப்படுத்துவதற்கான நல்ல முயற்சி. இவ்வாறு அவர் கூறினார்.

## "5 தமிழர்கள் மாலியில் கடத்தல்; உடனடியாக மீட்க வெளியுறவு துறைக்கு கனிமொழி எம்.பி. கோரிக்கை",



"சென்னை, நவ.11

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான மாலியில், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மற்றும் அல்கொய்தா அமைப்புகளால் பல்வேறு இடங்களிலும் வன்முறை பரவி காணப்படுகிறது. அவர்கள் மக்களிடையே வன்முறையை பரப்புவதுடன், வெளிநாட்டு தொழிலாளர்களை கடத்துவதும், மிரட்டி பணம் பறிப்பதும் போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகிறது என்ற குற்றச்சாட்டும் உள்ளது. இந்நிலையில், 5 இந்தியர்களை ஆயுதம் ஏந்திய குழு ஒன்று கடந்த 6 ந்தேதி கடத்தி சென்றுள்ளது. மேற்கு மாலியின் கோப்ரி பகுதியருகே தனியார் மின் நிறுவனம் ஒன்றில் வேலை செய்து வந்த இந்திய தொழிலாளர்கள் 5 பேரை அடையாளம் தெரியாத ஆயுதம் ஏந்திய குழுவினர் கடத்தி சென்றனர். அவர்கள் எந்த பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டனர். என்ன ஆனார்கள் என்ற விவரம் எதுவும் வெளி யிடப்படவில்லை. இதனால் முன்னெச்சரிக்கையாக, அந்த நிறுவனத்தில் இருந்த மற்ற இந்திய தொழிலாளர்கள் அனைவரும் பாதுகாப்பாக பமாகோ நகருக்கு கொண்டு செல்லப்பட்டனர். இந்த கடத்தல் சம்பவத்திற்கு எந்தவொரு அமைப்பும் உடனடியாக பொறுப்பேற்கவில்லை. கடத்தப்பட்டவர்கள் 5 பேரும் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள். அவர்கள் தூத்துக்குடி மாவட்டம் நாறைக்கிணறு பகுதியை சேர்ந்த பி. பொன்னுதுரை (41), கோடியங்குளம் பகுதியை சேர்ந்த எஸ். புதியவன் (52), கலப்பைப்பட்டி பகுதியை சேர்ந்த எம்.பேச்சிமுத்தி (42) மற்றும் தென்காசி மாவட்டம் கடையநல்லூரை சேர்ந்த இசக்கிராஜா (36) மற்றும் தளபதி சுரேஷ் (26) ஆகியோர் ஆவர். இந்த நிலையில், தி.மு.க. துணை பொதுச்செயலாளர் மற்றும் நாடாளுமன்ற தி.மு.க. குழு தலைவரான கனிமொழி எம்.பி., தனது சமூக வலைத்தள பக்கத்தில் , கடத்தப்பட்ட 5 தமிழர்களையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய வெளியுறவு துறை அமைச்சகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். மேற்கு ஆப்ரிக்கா மாலி நாட்டில் பணிபுரிந்து வந்த தூத்துக்குடி மற்றும் தென்காசியை சேர்ந்த பொன்னுதுரை, புதியவன், பேச்சிமுத்து, இசக்கிராஜா மற்றும் தளபதி சுரேஷ் ஆகிய ஐந்து தொழிலாளர்கள், அந்த நாட்டிலுள்ள ஆயுத குழுவால் கடத்தப்பட்ட செய்தி மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. கடத்தப்பட்டிருக்கும் அத்தொழிலாளர்களை மீட்டு, அவர்கள் பாதுகாப்பாக நாடு திரும்புவதற்கு அந்நாட்டு அதிகாரிகளுடன் இணைந்து, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டு கொள்கிறேன் என்று பதிவிட்டுள்ளார். ",

# சேலம் கிச்சிபாளையம்,ஜெய் மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவன் மாவட்ட அளவில் கராத்தே போட்டியில் முதலிடம்.



சேலம், நவ.11

சேலம் பச்சப்பட்டி ஸ்ரீ செல்வ கணபதி மக்கள் சேவை அறக்கட்டளை நிறுவன தலைவர் வி கே பிரகாஷ் சிந்துஜா சிறந்த சமூக சேவகர்கள். இவர்களது மகன் எஸ்.பி .ஷாம் (வயது 13 ). கிச்சிபாளையம் ஜெய் மெட்ரிகுலேஷன் பள்ளியில் 8 ஆம் வகுப்பு படித்து வருகிறார். இவர் கடந்த 9 ந் தேதி சேலம் குரங்கு சாவடி பகுதியில் உள்ள கிஸிமிஷிணி இன்டர்நேஷனல் பள்ளியில் நான்காவது எலீட் ஓபன் கராத்தே சாம்பியன்ஷிப் 2025" இந்தப் போட்டி 'ஷோபுகாய் ஷிட்டோர்யூ கராத்தே ஃபெடரேஷன் ஆஃப் இந்தியா' அமைப்பால் ஹன்ஷி அல்தாஃப் ஆலம், தமிழ்நாடு விளையாட்டு கராத்தே சங்கத்தின் (TSKA) பொதுச் செயலாளர் தலைமையில், சென்சாய் ஷென்பகராய், சேலம் மாவட்ட கராத்தே சங்கத்தின் பொதுச் செயலாளர் ஒருங்கிணைப்பில், சேலம் மாவட்ட அளவிலான சாம்பியன்ஷிப் போட்டி சிறப்பாக நடத்தப்பட்டது. ஜே.எஸ்.கே.ஏ (Japan Shotokan Karate Academy)யைச் சேர்ந்த மாணவர் ஷாம். எஸ். பி., நடைபெற்ற கராத்தே போட்டியில் பங்கேற்று, கத்தா பிரிவில் முதல் இடமும், குமித்தே பிரிவில் இரண்டாம் இடமும் பெற்றுள்ளார்.

கராத்தே போட்டியில் சாதனை படைத்த மாணவன் ஷாம்மை சேலம் மாவட்டத்தை சேர்ந்த ஜப்பான் ஷோட்டோகன் கராத்தே அகாடமி (ஜே. எஸ். கே. ஏ. ) கிச்சிப்பாளையம் மற்றும் அம்மாபேட்டை கிளை, சேலம் மாநகராட்சி 43 ஆவது வார்டு கவுன்சிலர் எம்.குணசேகரன், சேலம் மாவட்ட ஸ்போர்ட்ஸ் கராத்தேடோ அசோசியேஷன் சங்கத்தின் தலைவர் ஸ்ரீநிவாசன், செயலாளர் செண்பக ராஜ், பொருளாளர் மற்றும் அவரின் பயிற்சியாளர் மாஸ்டர் பி. சரவணன் மற்றும் பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்டோர் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# நாமக்கல் மாவட்ட கூட்டுறவு விற்பனை சங்கத்தில் அரசு முதன்மை செயலாளர் ஆய்வு *ரூ.66 லட்சத்தில் நல உதவிகள் வழங்கினார்




நாமக்கல் : நவ.11

நாமக்கல் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், அரசு முதன்மை செயலாளர் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அதைத் தொடர்ந்து மத்திய கூட்டுறவு வங்கியில், ரூ.66 லட்சத்தில பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நாமக்கல் மோகனூர் ரோட்டில் உள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில், வாடிக்கையாளர்களின் வசதிக்காக கோர் பேங்கிங் சொலுவிசன், செக் டிரான்ஸ்சாக்ஸசன் சிஸ்டம் ஆகிய பிரிவுகள் புதியதாக தொடங்கப்பட்டுள்ளது. இப்பிரிவுகள் தொடக்க விழா நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ராஜேஸ்குமார் எம்பி தலைமை வகித்தார். மாவட்ட கலெக்டர் துர்காமூர்த்தி முன்னிலை வகித்தார். இதில், தமிழ்நாடு அரசின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, அரசு முதன்மை செயலாளர் சத்யபிரதா சாகு, கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். அப்போது, நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின், தலைமை அலுவலக செயல்பாடுகள், வாடிக்கையாளர்கள் வழங்கப்படும் சேவைகள் குறித்து கூட்டுவு வங்கி அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். தொடர்ந்து வங்கி வளாகத்தில், அரசு முதன்மை செயலாளர் சத்யபிரதா சாகு, தமிழ்நாடு அரசின் சிறப்பு திட்டமான மகளிருக்கான மின் ஆட்டோ வாகனம் தலா ரூ.3 லட்சம் வீதம் ரூ. 6 லட்சம் மதிப்பில், 2 பெண்களுக்கு மின் ஆட்டோ வாகனங்கள், மற்றும் 4 பேருக்கு வீட்டு அடமான கடன் உதவிகள் என மொத்தம் ரூ. 66 லட்சம் மதிப்பீட்டில் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாநகர மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, கூட்டுறவாளர் ராணா ஆனந்த், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் அருளரசு, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் சந்தானம், பொது மேலாளர் தீனதயாளன், முதன்மை வருவாய் அலுவலர் பால் ஜோசப், தலைமை அலுவலக அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக, நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு, தமிழ்நாடு அரசின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, அரசு முதன்மைச் செயலர் சத்ய பிரதா சாகு நேரில் சென்று, சங்கத்தின் செயல்பாடுகள், முதல்வர் மருந்தக சேமிப்புக் கிடங்கு, கூட்டுறவு பல்பொருள் அங்காடி, கூட்டுறவு மருந்தகம், நகைக் கடன் சேவை மையம் மற்றும் பெட்ரோலிய பொருட்கள் விற்பனை நிலையம் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். சங்கத்தில் நடைபெற்று வரும் பணிகள், சேவைகள் குறித்து, சரக துணைப் பதிவாளர் ஜேசுதாஸ், சங்கப் பொது மேலாளர் மோகன்வேல் ஆகியோரிடம் கேட்டறிந்தார்.

# மணப்பாறை அருகே திமுக முதன்மைச் செயலாளர் பிறந்தநாளை பிரியாணி வழங்கி கொண்டாடிய திமுகவினர்.



திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே உள்ள வையம்பட்டியில் திமுகவின் முதன்மைச் செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான கே.என்.நேருவின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. பேருந்து நிலையம் அருகே பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து அமைக்கப்பட்டிருந்த அலங்கார மேடையில் முன்னாள் வையம்பட்டி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ராஜலெட்சுமி வெங்கடேசன் தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்பு, மற்றும் பிரியாணி வழங்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து பேருந்து பயணிகளுக்கு லட்டு, சிக்கன் பிரியாணி, ஜில்லி பொதுமக்களுக்கும் கழக தோழர்களுக்கும் வழங்கி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். இதில் முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அ.பாலசுப்பிரமணியன், மாவட்ட பிரதிநிதி வி.வி.வெங்கடேசன், ஒன்றிய பொருளாளர் ஓந்தாம்பட்டி மணி, வழக்கறிஞர் துரைஅழகிரி, ஒன்றிய அவைத்தலைவர் அண்ணாத்துரை, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் நாகராஜ், கப்பல் சதீஸ், மணிகண்டன் உள்ளிட்ட திமுகவினர் திரளாக கலந்து கொண்டனர். விழாவில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஜவகர் சிறுவர் மன்ற மாணவர்கள் மண்டல அளவில் சிலம்பத்தில் சிறப்பிடம்..!



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஜவகர் சிறுவர் மன்றம் மாணவர்கள் மண்டல அளவில் நடைபெற்ற சிலம்பம் போட்டியில் சிறப்பிடம் பெற்றமைக்கு பாராட்டு விழா நடைபெற்றது. சிறுவர் மன்றத்தில் பயிற்சி பெறும் மாணவன் ப.ஜித்தேஷ் மண்டல அளவில் முதலிடமும், மாவட்ட அளவில் மூன்றாமிடமும், வி. மாதேஷ், தினேஷ் குமார், தனிஷ் ஆகியோர் மண்டல அளவில் சிலம்பத்தில் சிறப்பிடமும் பெற்று சான்றிதழ்களை பெற்றனர். அவர்களுக்கான பாராட்டு விழா வந்தவாசி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இதில் மன்ற ஒருங்கிணைப்பாளர் பெ.பார்த்திபன், சிலம்பம் மாஸ்டர் சந்தோஷ், தபேலா கலைஞர் ஜேம்ஸ், ஓவிய ஆசிரியர் ரமேஷ், ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன் உள்ளிட்டோர் பங்கேற்று மாணவர்களை பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# முல்லைப் பெரியாறு அணையை 7 பேர் கொண்ட கண்காணிப்புக் குழுவினர் ஆய்வு

சென்னை : நவ.11–

முல்லைப் பெரியாறு அணையை 7 பேர் கொண்ட கண்காணிப்புக் குழுவினர் ஆய்வு செய்ய சென்றனர். உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட பழைய குழு கலைக்கப்பட்டு தற்போது புதிதாக 7 பேர் கொண்ட புதிய கண்காணிப்புக் குழுத் தலைவராக தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் அனில் ஜெயின் நியமிக்கப்பட்டார்.

இந்த ஆணையமே முல்லைப் பெரியாறு அணை தொடர்பான அனைத்து விவகாரங்களையும் கவனிக்கும் எனவும் கடந்தாண்டு அறிவித்தது. 2ம் முறையாக ஆய்வு: இந்தக் குழு அமைக்கப்பட்ட பிறகு கடந்த மார்ச் 22ஆம் தேதி முதல் முறையாக அணைப்பகுதியில் ஆய்வு செய்தது.

அதன் பின் இரண்டாவது முறையாக முல்லைப்பெரியாறு அணையின் தன்மை, பராமரிப்பு , பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்ய சென்றனர்.

இக்குழுவில் ராகேஷ் டோடேஜா( பேரிடர்/ மீள் தன்மை தில்லி), ஆனந்த் ராமசாமி(மிசிணிஞ், பெங்களூர் ), ஜெயகாந்தன்( தமிழ்நாடு அரசு செயலர்), பிஸ்வநாத் சின்கா( கூடுதல் தலைமைச் செயலர் கேரளம் ), சுப்பிரமணியன்(சிஜிசி தொழில் நுட்ப நிபுணர், தலைவர் ),பிரியோஷ் ( தலைமைப் பொறியாளர்) ஆகிய 7 பேர் அணை பகுதிக்கு தேக்கடியில் படகு துறையில் வழியாக தமிழக மற்றும் கேரளத்து சொந்தமான தலா இரு படகுகள் வழியாக சென்று ஆய்வு செய்ய சென்றனர்.

# திருமாவளவனுக்கு 'இசட்' பிரிவு பாதுகாப்பு கோரி அரியலூரில் விசிகவினர் உண்ணாவிரதம்

அரியலூர்: நவ.11–

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனுக்கு, இசட் பிரிவு பாதுகாப்பு வழங்கக்கோரி அக்கட்சியினர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரியலூர் அண்ணாசிலை அருகே, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனுக்கு, மத்திய அரசு 'இசட்' பிரிவு பாதுகாப்பும், மாநில அரசுகள் கூடுதல் பாதுகாப்பும் வழங்க வேண்டும் என வலியுறுத்தி விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் இன்று (நவ.10) உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இப்போராட்டத்தில், திருமாவளவனுக்கு அச்சுறுத்தல்கள் அதிகம் உள்ளதால், மத்திய, மாநில அரசுகள் இசட் பிரிவு பாதுகாப்பு வழங்க வேண்டும் என வலியுறுத்தி பேசி வருகின்றனர். உண்ணாவிரத போராட்டத்துக்கு அக்கட்சியின் அரியலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் அங்கனூர் சிவா தலைமை வகித்துள்ளார். கிழக்கு மாவட்டச் செயலாளர் கதிர்வளவன் உட்பட கட்சி நிர்வாகிகள் 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

## டிராக்டர் மீது பைக் மோதிய விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழப்பு

பொள்ளாச்சி: ராயல் என்ஃபீல்ட் வாகனம் எதிரே வந்த டிராக்டர் மீது மோதிய விபத்தில் பைக்கில் பயணித்த இருவர் உயிரிழந்தனர். பரத் (33) மற்றும் சதாசிவம் (30) அதிவேகமாக பைக்கை ஓட்டி வந்ததே விபத்துக்கு காரணம் என தகவல். இது குறித்து வழக்குப்பதிவு செய்து வடக்கிபாளையம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நீலகிரி குன்னூரில் தேனீக்கள் கொட்டியதில் வனத்துறையினர் 6 பேர் படுகாயம்!

நீலகிரி: நவ. 11–

நீலகிரி குன்னூரில் தேனீக்கள் கொட்டியதில் வனத்துறையினர் 6 பேர் படுகாயம் அடைந்தனர். வனத்துறைக்கு சொந்தமான நிலத்தில் பராமரிப்பு பணியில் ஈடுபட்டபோது 6 பேரை தேனீக்கள் கொட்டியது. தேனீக்கள் கொட்டியதில் படுகாயமடைந்த 6 பேரும் சிகிச்சைக்காக குன்னூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# சேலம் மாணவர்கள் சாதனை!



சேலம் : நவ: 11

சேலம் குரங்கு சாவடி Arise பள்ளியில் நடைபெற்ற நான்காவது எலீட் ஓபன் கராத்தே சாம்பியன்ஷிப் 2025" இந்தப் போட்டி 'ஷோபுகாய் ஷிட்டோர்யூ கராத்தே ஃபெடரேஷன் ஆஃப் இந்தியா' அமைப்பால் ஹன்ஷி அல்தாஃப் ஆலம், தமிழ்நாடு விளையாட்டு கராத்தே சங்கத்தின் (TSKA) பொதுச் செயலாளர் தலைமையில் ,சென்சாய் ஷென்பகராய், சேலம் மாவட்ட கராத்தே சங்கத்தின் பொதுச் செயலாளர் ஒருங்கிணைப்பில், சேலம் மாவட்ட அளவிலான சாம்பியன்ஷிப் போட்டி சிறப்பாக நடத்தப்பட்டது. (சாய் புடோகான் கராத்தே டோஜோ )வை சேர்ந்த மாணவர்கள் மௌனிஸ்வரன். விசான்ந். ஜெய்ஸ். தரனிஸ்.கிரித்தீஸ்.ஆகிய மாணவர்கள் கட்டா பிரிவில் முதல் இடமும் ரிஸ்வந். கட்டா பிரிவில் இரண்டாம் இடமும்

சிவகுரு.கிரிஸிவன்ந் ஆகிய மாணவர்கள் கட்டா பிரிவில் மூன்றாவது இடமும் இடமும் இலேஸ் நாம்தேவ். இனேஸ் சிவகிரி. ஆகிய இருவரும் குமித்தே பிரிவில் முதல் இடமும் குருபிரசான்ந் குமித்தே பிரிவில் இரண்டாம் இடமும் சேசாய்.கார்த்திகேயேன் ஆகிய மாணவர்கள் குமித்தே பிரிவில் மூன்றாவது இடமும் பெற்றுள்ளனர் . இவர்களின் பயிற்சியாளர்கள் மாஸ்டர். ரவிக்குமார் மற்றும் மாஸ்டர். தமிழரசு ( சேலம் மாவட்டத்தில் சேர்மன் ராமலிங்க தெருவில் அமைந்துள்ள பாவடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி கிளை) இவர்களுக்கு சேலம் மாவட்டத்தில் உள்ள சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் பள்ளி ஆசிரியர்கள் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

## ஏற்காடு செங்கலத்துப்பாடி கிராமத்தில் மக்களின் புதிய முயற்சி

# "யூனிட்டி ஆஃப் யூத் ஃபவுண்டேஷன்" மூலமாக பள்ளி மாணவர்களுக்கு மாலை நேர பயிலகம் மற்றும் பாரம்பரிய கலையின் சிலம்பம் பயிற்சி தொடக்கம்



சேலம்: நவ : 11

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் "நம் குடும்பம், நம் வீடு" என்று வாழும் மக்களிடையே "நம் கிராமம், நம் மக்கள்" என்ற எண்ணத்துடன் செங்கலத்துப்பாடி மக்கள் கிராமத்தின் வளர்ச்சிக்காக புதிய முயற்சியை எடுத்து, ஒன்றிணைந்து செயல்படத் தொடங்கினர்.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, *தமிழகத்தின் பல கிராமங்களின் முன்னேற்றத்திற்கும் சமூக நலனிற்கும் வழிகாட்டி விஜய் அவரின் தலைமையில் இயங்கும் "யூனிட்டி ஆஃப் யூத் ஃபவுண்டேஷன்" அமைப்பின் ஆதரவுடன், இன்று செங்கலத்துப்பாடி கிராமத்தில் மாலை நேர பயிலகம் மற்றும் பாரம்பரிய கலையின் சிலம்பம் பயிற்சி மையமும் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் அமைப்பின் நிறுவனர் திரு விஜய் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் பழனி, சுந்தரம், மற்றும் லக்ஷ்மன், கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும், சர்வதேச அளவில் சாதனை படைத்த ஏற்காடு குண்டூர் கிராமத்தைச் சேர்ந்த மாணவி அனுஷ்கா மற்றும் மாணவன் மதன் ஆகியோர் தங்கள் வெற்றிப் பாதையை செங்கலத்துப் பாடி மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டு, இளைஞர்களுக்கு ஊக்கமளித்தனர்.

இம்முயற்சி மூலம் செங்கலத்துப்பாடி மக்கள், கல்வி, விளையாட்டு, பெண்களின் முன்னேற்றம், தொழில் வாய்ப்பு மற்றும் மருத்துவ நலன் போன்ற பல துறைகளில் கிராமத்தின் முன்னேற்றத்திற்காக ஒற்றுமையாக செயல்படவுள்ளதாக உறுதியளித்தனர்.

## சேலத்தில் இரு கட்சிகளின் தொண்டர்கள் உற்சாகம்.

# நயினார் நாகேந்திரன் கூட்டத்துக்கு திரண்டு வந்த அதிமுகவினர்.

சேலம். நவ. 11–

சேலம் மாவட்டத்தில் மேட்டூர் தொகுதியில் திமுக, அதிமுக,பாமக கட்சிகள் சம பலத்தில் உள்ளன. இதனால்,இந்தத் தொகுதி முக்கியமாக பார்க்கப்படுகிறது.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை மேட்டூர் தொகுதியில் தான் தேமுதிக, நாதக, பாமக, பாஜக கட்சிகள் முதல்கூட்டத்தை நடத்தியுள்ளன. அந்த வகையில், மேட்டூரில் பாஜக சார்பில் ‘தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம்‘ பொதுக்கூட்டத்தில் அக்கட்சியின் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.



இந்த பொதுக்கூட்டத்தில் அதிமுகவினர் கலந்து கொள்வதற்காக சேலம் பாஜக மேற்கு மாவட்ட தலைவர் ஹரிராமன், அதிமுக புறநகர் மாவட்ட செயலாளர் இளங்கோவனை நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தார். பின்னர், அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி இசைவு கொடுத்ததையடுத்து, அதிமுக புறநகர் மாவட்ட செயலாளர் இளங்கோவன் நிர்வாகிகள், தொண்டர்களுடன் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இந்த கூட்டம் நடைபெறும் நேரத்துக்கு முன்பாகவே மேட்டூர் வந்து காத்திருந்த அதிமுக மாவட்ட செயலாளர் இளங்கோவன், பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரனை வரவேற்று ஒன்றாக இருவரும் மேடை ஏறி அமர்ந்து, கருத்துகளை பரிமாறி சிரித்து மகிழ்ந்தனர். கூட்டத்துக்கு 2,000 நாற்காலிகள் போடப்பட்டதில், அனைத்து இருக்கைகளும் நிரம்பிய நிலையில், கிட்டத்தட்ட சமபங்கு இருக்கைகளில் அதிமுக வினர் அக்கட்சி கொடியுடன் அமர்ந்திருந்தது இரு கட்சிகளின் தொண்டர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியது.

கூட்டத்துக்கு முன்பு, எம்.ஜி.ஆர். திரைப்பட பாடல்களின் இசை நிகழ்ச்சியும், திமுகவை எதிர்த்து ஜெயலலிதா பேசிய வீடியோவும் ஒளிபரப்பு செய்யப்பட்டது. தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் திமுக கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாதது குறித்தும், மக்களின் குற்றச்சாட்டு குறித்தும் 2 வீடியோக்கள் எல்இடி திரையில் ஒளிப்பரப்பு செய்யப்பட்டன.

பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் பேசும் போது, ‘அதிமுக மாவட்ட செயலாளர் இளங்கோவன் வரும் தேர்தலில் அடுத்த இடத்திற்கு முன்னேறிச் செல்வார்’ என்று பேசி அவரையும்,கட்சியினரையும் குஷிப்படுத்தினார்.

குறிப்பாக, பாஜக நடத்திய கூட்டம் ஒரு பக்கம் அதிமுக நடத்திய கூட்டம் மாதிரியும், மறு பக்கம் பாஜகவின் வளர்ச்சிக் கூட்டம் மாதிரியும் அமைந்தது. இந்த கூட்டத்துக்கு அதிமுக கொடுத்த ஆதரவினால், பாஜக மாநில தலைவரும், அக்கட்சியினரும் மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளனர். இதனால் அதிமுக கூட்டணியில் சேலம் மாவட்டத்தில் ஒரு தொகுதி கேட்டு வாங்க காய் நகர்த்தவும் பாஜக முடிவு செய்துள்ளது.

# புதுச்சேரியில் SIR-ஐ கண்டித்து இன்று நவ.11 “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்”

## மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அறிக்கை!

புதுச்சேரி, நவ. 11–

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் திமுக மாநில அமைப்பாளர் இரா. சிவா, காங்கிரஸ் தலைவர் வெ. வைத்திலிங்கம் எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு. சலீம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் ராஜாங்கம், விடுதலை சிறுத்தைகள் முதன்மைச் செயலாளர் தேவபொழிலன், திராவிடர் கழகம் வீரமணி, மதிமுக மாநில செயலாளர் ஹேமா. பாண்டுரங்கன், மக்கள் நீதி மய்ய பொதுச் செயலாளர் சந்திரமோகன், சிபிஐ (எம்எல்) பாலசுப்ரமணியன், மனிதநேய மக்கள் கட்சி பஷீர் அகமது, இந்திய யூனியன் முஸ்லீம்லீக் தலைவர் முகமது அலி மற்றும் தோழமைக் கட்சிகள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

மத்திய அரசின் கைப்பாவையாகவும், எதேச்சதிகாரப் போக்குடனும் இந்திய தேர்தல் ஆணையம் செயல்பட்டு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில் பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தபோதிலும் இந்திய தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் சீராய்வு (SIR) கொண்டுவந்துள்ளது.

பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் களையாமல் தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட 12 மாநிலங்களில் SIR திட்டத்தைச் செயல்படுத்துவது மக்களின் வாழ்வுரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழிதோண்டி புதைப்பதாகவும் உள்ளது. அத்துடன் தேர்தல் ஆணையத்தின் அவசரமே அதீத சந்தேகங்களை எழுப்புகிறது. சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு மூலம் புதுச்சேரியில் உள்ள உண்மையான வாக்காளர்களின் பெயர்களைப் பட்டியலில் இருந்து நீக்க தேர்தல் ஆணையம் திட்டமிடுகிறது.

எங்கள் கூட்டணி கட்சிகள் எதிர்பார்த்தவாறே 4ஆம் தேதியில் இருந்து இன்று வரை களத்தில் ஷிமிளி பெரும்பாலான வாக்காளர்களை நீக்கப்படும் அச்சத்தை உறுதிபடுத்துகிறது. BLO&க்களும், BLA2க்களுக்கும் இடையே சரியான தகவல் தொடர்புகள் ஏற்படுத்தப்படவில்லை. தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள 2002/2005 வாக்காளர் பட்டியல்கள் முழுமையற்றதாகவும், குழப்பம் விளைவிப்பதாகவும் அமைந்துள்ளன.

எனவே, இந்த SIR சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்திற்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவிமடுக்காமல் ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறி, எதேச்சாதிகாரப் போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம் புதுச்சேரியில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு கொண்டு வந்துள்ளதை கண்டித்து, இன்று 11ஆம் தேதி காலை 10 மணியளவில் புதுச்சேரி பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலை முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று நமது எதிர்ப்பை பதிவு செய்வோம் வாரீர்! வாரீர்! இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026ஐ முன்னிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கையெழுத்து இயக்கத்தினை துவக்கி வைத்தார். உடன் திட்ட இயக்குனர் (ஊரக வளர்ச்சி முகமை) பிரியா உட்பட பலர் உள்ளனர்.




நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி மாவட்ட ஆட்சியரக வளாகத்தில், வாக்காளர் படடியல் சிறப்பு தீவிர திருத்தம் –2026 தொடர்பாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழுவினர் வரைந்த ரங்கோலி கோலத்தினை பார்வையிட்டனர். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விமலா உட்பட பலர் உள்ளனர்.

# காரைக்கால் மீனவர்கள் 3 பேருக்கு 6 மாதம் சிறைத் தண்டனை விதித்து இலங்கை நீதிமன்றம் உத்தரவு!!

காரைக்கால்: நவ.11–

காரைக்கால் மீனவர்கள் 3 பேருக்கு 6 மாதம் சிறைத் தண்டனை விதித்து இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இலங்கை கடற்படையின் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. எல்லை பகுதியில் தமிழ்நாடு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது, அவர்களின் படகுகளை சேதப்படுத்துவது, படகுகள் மற்றும் மீனவர்களை சிறைபிடித்து செல்வது போன்ற சம்பவங்கள் தொடர்கதையாகி உள்ளது.

இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிறது. மத்திய, மாநில அரசுகள் இந்த பிரச்னையை முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட மக்களும் வலியுறுத்தி வருகின்றனர். அதன்படி, எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாக செப்.28, அக்.9ல் 29 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்து சிறையில் அடைத்தது.

இந்நிலையில், காரைக்கால் மீனவர்கள் 29 பேரையும் இன்று இலங்கை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இன்று ஊர்க்காவல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட 29 மீனவர்களில் 26 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். மேலும், 3 பேருக்கு 6 மாதம் சிறைத் தண்டனை விதித்து இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஒரு படகு உரிமையாளருக்கு 6 மாத சிறையும் 12 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அபராத தொகையை செலுத்த தவறினால் கூடுதலாக 3 மாதம் சிறை தண்டனை விதிக்கப்படும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


# திருச்சி காவலர் குடியிருப்பு வளாகத்தில்” இளைஞர் கொலை; 5 பேர் கைது ,

“திருச்சி, நவ.11–

திருச்சி பீமநகர் கீழத்தெருவை சேர்ந்தவர் தாமரைச்செல்வன் (24). இவர் தனியார் கட்டுமான நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். இன்று காலை பீமநகர் அருகே உள்ள தனது வீட்டில் இருந்து மார்சிங்பேடை பகுதி வழியாக இருசக்கர வாகனத்தில் வேலைக்கு சென்றுள்ளார். அப்போது அங்கு இரண்டு இரு சக்கர வாகனத்தில் வந்த நான்கு பேர் கொண்ட கும்பல் தாமரைச் செல்வனின் இரு சக்கர வாகனத்தை திடீரென வழிமறித்து மோதியுள்ளனர். இதில் நிலை தடுமாறி தாமரைச்செல்வன் கீழே விழுந்துள்ளார். அந்த கும்பல் அவரை அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களால் சரமாரியாக வெட்டியுள்ளனர். தாமரை செல்வன் உயிர் தப்பிக்க அருகிலிருந்த காவலர் குடியிருப்புக்குள் அடைக்கலம் தேடி ஓடியுள்ளார். இரவு பணியை முடித்துவிட்டு வீட்டில் உள்ள தனது பிள்ளைகளை பள்ளிக்கு அழைத்துச்செல்ல போக்குவரத்து காவலர் செல்வராஜ் தயாராகிக்கொண்டிருந்த நிலையில், அவரது வீட்டுக்குள்ளே துரத்தி சென்ற கும்பல் கண்இமைக்கும் நேரத்தில் சமையல் அறையில் நுழையவிட்டு, தாமரை செல்வனை சரமாரியாக வெட்டி படுகொலை செய்தனர். இது குறித்து தகவலறிந்த திருச்சி மாநகர வடக்கு துணை ஆணையர் சிபின் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டார். மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. இந்தநிலையில், திருச்சி மாசிங்பேட்டையில் உள்ள காவலர் குடியிருப்பு வளாகத்தில் இளைஞர் கொல்லப்பட்ட வழக்கில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ரியல் எஸ்டேட் நிறுவன பணியாளர் தாமரைச்செல்வனுக்கும் சதீஷ் என்பவருக்கும் இடையே தகராறு என முதற்கட்ட தகவல் வெளியாகி உள்ளது. தகராறில் சதீஷை தாமரைச்செல்வன் அடித்ததால் பழிவாங்கும் நோக்கில் கொலை செய்ய திட்டமிட்டதாகவும் கூறப்படுகிறது. படுகொலை சம்பவத்தில் ஈடுபட்டதாக சதீஷ், பிரகாகரன், நந்து, கணேசன் ஆகியோரை போலீசார் கைது செய்தனர். ஏற்கனவே ஒருவர் கைதாகி இருந்தது குறிப்பிடத்தக்கது. கொலை நடந்த சில மணி நேரத்தில் குற்றவாளிகளை போலீசார் கைது செய்துள்ளனர்.”,

# புதுச்சேரி வில்லியனூர் தொகுதி ஆதிதிராவிட பயனாளிகளுக்கு திருமண உதவித் தொகைக்கான ஆணை

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா வழங்கினார்



புதுச்சேரி அரசின் ஆதிதிராவிட நலத்துறை மூலம் திருமண உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் வில்லியனூர் சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த ஆதிதிராவிட பயனாளிகள் 9 பேருக்கு தலா ரூ. ஒரு லட்சம் வீதம் உதவித் தொகைக்கான ஆணை வழங்கும் நிகழ்ச்சி வில்லியனூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடந்தது.

இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அவர்கள் கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு திருமண உதவித் தொகை பெறுவதற்கான ஆணையை வழங்கினார்.

இதில், திமுக தொகுதி செயலாளர் மணிகண்டன், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு. மோகன்தாசு, தொமுச தலைவர் அங்காளன், ஆதிதிராவிடர் நலக்குழு செல்வநாதன் என்கிற ஆறுமுகம், சிறுபான்மையினர் நலப்பிரிவு முகம்மது ஹாலிது, அவைத்தலைவர் ஜலால் ஹனீப், ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவர் கதிரவன், துணை அமைப்பாளர் காளி, தொகுதி துணைச் செயலாளர் அரிகிருஷ்ணன், அலுவலக உதவியாளர் மனோகர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகில் மேல்மங்கலம் வடக்கு கிராமத்தில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் அருகே அரசமரம் வேப்பமரம் தானாக தோன்றி உள்ளது



அறந்தாங்கி நவம்பர் 11

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகில் மேல்மங்கலம் வடக்கு கிராமத்தில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் அருகே அரசமரம் வேப்பமரம் தானாக தோன்றி உள்ளது .

இதை பார்த்த கிராம மக்கள் அரசமரம் சிவன் என்றும் வேப்பமரம் பார்வதி என்றும் அதற்கு திருக்கல்யாணம் நடத்துவதென முடிவு செய்து நேற்று கணபதி ஹோமத்துடன் தொடங்கி இன்று கிராம பெண்கள் 200க்கும் மேற்பட்டோர் பார்வதி பெண் வீட்டார் போன்று தலையில் பட்டு சேலை பட்டு வேஷ்டி பழங்கள் பாத்திரங்கள் போன்று 200 க்கும் மேற்பட்டோர் மேளதாளங்கள் முழங்க சீர் வரிசையாக தலையில் சுமந்து கோவில் வந்தனர்

சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க பூஜிக்கப்பட்ட புனித நீரை ஊற்றி வேம்பமரம் மற்றும் அரசரமரத்திற்கு திருமணம் நிகழ்வு நடத்தினர்

வேப்பமரத்திற்கும் அரசமரத்திற்கும் நடைபெறுகின்ற திருமணத்தை பார்ப்பதற்காக சுற்றுவட்டார பகுதி பொதுமக்கள் கலந்து கொண்டனர்

குறிப்பாக இந்த திருமணத்தை பார்த்தால் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணமும் குழந்தை பாக்கியம் இல்லாதவர் களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும் கூறப்படுகிறது

இதனால் சுற்று வட்டார கிராம பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்

கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் கோவில் நிர்வாகத்தின் சார்பாக அன்னதானம் வழங்கப்பட்டது.

# ஈரோடு மாவட்டம் பவானியில் கடத்தப்பட்ட குழந்தை 25 நாட்களுக்கு பிறகு மீட்பு..!!

ஈரோடு: நவ. 11–

ஈரோடு மாவட்டம் பவானியில் கடத்தப்பட்ட குழந்தை 25 நாட்களுக்கு பிறகு மீட்கப்பட்டுள்ளது. ஈரோடு சித்தோடு பகுதியில் உள்ள லட்சுமி நகரில் சேலம்– கொச்சின் நெடுஞ்சாலையில் இருக்கும் மேம்பாலத்தின் கீழ் ஆந்திராவை சேர்ந்த கூலி தொழிலாளர் தம்பதி வெங்கடேஷ், கீர்த்தனா வசித்து வந்தனர். இவர்களது ஒன்றரை வயது பெண் குழந்தை வந்தனா கடந்த 16ஆம் தேதி அன்று நள்ளிரவில் மாயமானது. பாலத்திற்கு அடியில் கொசு வலை போர்த்தி கொண்டு குடும்பத்துடன் உறங்கி கொண்டிருந்தனர். திடீரென விழித்து பார்த்த போது குழந்தையை காணவில்லை.

இதையறிந்து பெற்றோர் பெரிதும் அதிர்ச்சி அடைந்தனர். சுற்றுவட்டாரத்தில் பல இடங்களில் தேடிப் பார்த்தனர். எங்குமே கிடைக்கவில்லை. கடைசியில் உறங்கி கொண்டிருந்த இடத்தை கவனித்த போது, கொசு வலை கிழிந்திருந்தது தெரிய வந்தது. எனவே கொசு வலையை கத்தியால் கிழித்து, அதன் வழியே குழந்தையை கடத்தி சென்றிருக்கலாம் என்று சந்தேகித்தனர். பின்னர் போலீசில் புகார் தெரிவித்தனர்.

போலீசார் அப்பகுதியை சேர்ந்தவர்களிடம் விசாரித்த போது, மூன்று பேர் நள்ளிரவில் வந்து சென்றது தெரிய வந்தது. அவர்கள் தான் ஒன்றரை வயது பெண் குழந்தையை கடத்தி சென்றிருக்கக் கூடும் என்று போலீசார் கருதினர். இது தொடர்பாக சித்தோடு போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்து வந்தனர். இந்த நிலையில், கடந்த 16ம் தேதி கடத்தப்பட்ட குழந்தை 25 நாட்களுக்கு பிறகு மீட்கப்பட்டது. கடத்தப்பட்ட குழந்தையை நாமக்கலில் போலீசார் பத்திரமாக மீட்டனர். குழந்தை கடத்தல் தொடர்பாக 2 பேரை பிடித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.




தமிழக முதல்வர் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக அன்புச்சோலை முதியோர் மனமகிழ் வள மையம் என்ற திட்டத்தை திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் மாநகராட்சி மேயர் இராமச்சந்திரன் முன்னிலையில் சேலம் மாவட்டம், கோரிமேடு, ஸ்ரீ வெங்கடேஸ்வரா நகரில் உள்ள அன்புச்சோலை மையத்தில் நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் மாநகராட்சி துணை மேயர் சாரதாதேவி, மாவட்ட சமூக நல அலுவலர் கார்த்திகா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர் சுகந்தி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சைமன்ராஜ் ஆகியோர் உள்ளனர்.

# ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்... 295 மனுக்கள் பெறப்பட்டு மேல் நடவடிக்கைக்கு உத்தரவு..





ஈரோடு. நவ, 11

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 295 மனுக்கள் பெறப்பட்டு மேல் நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

வாரம் தோறும் திங்கள் கிழமை பொதுமக்கள் தங்களின் குறைகளை தெரிவிக்கும் வகையில், அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்களுக்கான, மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுவது வழக்கம்.

அதன் அடிப்படையில் நேற்று காலை ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இந்த மக்கள் குறை தீர்ப்பு நாள் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர்ச. கந்தசாமி தலைமை வகித்தார்.

இந்த மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், ஈரோடு மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் இருந்து பொதுமக்கள் ஈரோடு ஆட்சியர் அலுவலகம் வந்து தங்களின் குறைகளை மனுக்களாக ஆட்சியரிடம் கொடுத்தனர்.

அந்தவகையில்பொதுமக்கள் தங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கோரிக்கைகளை முன்வைத்து மனுக்கள்.

அந்த மனுக்களின் இலவச வீட்டு மனை பட்டா, பட்டா கோருதல், முதியோர் உதவித்தொகை, விதவைகள் உதவித்தொகை, கலைஞரின் மகளிர் உதவித்தொகை மற்றும் மாற்று மாற்று திறனாளிகளுக்கான உதவித்தொகை, காவல்துறை சார்ந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காண கோருதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை பொதுமக்கள் ஆட்சியரிடம் கொடுத்தனர்.

அதன் அடிப்படையில் மொத்தம் 295 மனுக்கள் வரப்பெற்று மேல் நடவடிக்கைக்கு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது.

மேலும்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பிலும், பல்வேறு உதவிகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

தொடர்ந்து ஈரோடு ஆட்சிய ச. கந்தசாமி ஈரோடு ஆட்சியர் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தீவிர வாக்காளர் சிறப்பு சேர்க்கை பணிகள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். மேலும் அங்கு அமைக்கப்பட்டிருந்த போர்டில் எஸ்ஐ ஆர் குறித்த விழிப்புணர்வு வாசகத்தை எழுதி கையெழுத்திட்டார். இதனை தொடர்ந்து பொதுமக்களும் தங்களின் கருத்துக்களை தெரிவித்து கையொப்பமிட்டனர்.

இந்த மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள்.

# ஆட்டோ தொழிலாளி போஸ்டருடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்ததால் பரபரப்பு.




கள்ளக்குறிச்சி நவ 11

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று பொதுமக்கள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.

இந்த குறைதீர் கூட்டத்தில் சங்கராபுரம் பகுதியைச் சார்ந்த ஆட்டோ ஓட்டுநர் லோகநாதன் என்பவர் போஸ்டருடன் மனு கொடுக்க வந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதை கண்டு பாதுகாப்பில் ஈடுபட்டு இருந்த போலீசார் விசாரித்த போது அவர் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மூலம் மாவட்ட தொழில் மையம் அலுவலகத்தில் பதிவு செய்து பாரத ஸ்டேட் வங்கி சங்கராபுரம் கிளையில் கடன் பெற்று கள்ளக் குறிச்சியில் இயங்கி வந்த தீபம் மோட்டார்ஸ் நிறுவனத்தில் UPCOTEV MOTORS நிறுவனத்தின் ணி எலக்ட்ரிக் சாரதி ஆட்டோ வாங்கியுள்ளார். இந்த ஆட்டோ வாங்கிய நாள் முதலே சரியான முறையில் இயங்காமல் பழுதடைந்த நிலையில் இருந்தது இதனால் ஆட்டோ ஓட்டுனர் லோகநாதன் விழுப்புரம் நுகர்வோர் நீதிமன்றத்தின் முறையிட்டார். இதன் மூலம் 12/7/2014 அன்று ஆட்டோ ஓட்டுநருக்கு சாதகமாக நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து. அந்த தீர்ப்பில் சம்பந்தப்பட்ட ஆட்டோ வாகனத்தை முழுமையாக சரி செய்து சிறந்த முறையில் இயங்கும் தன்மையில் ஒப்படைக்க வேண்டும் அல்லது புதிய வாகனம் தர வேண்டும் என நுகர்வோர் ஆணையம் தீர்ப்பளித்துள்ளது. இழப்பு தொகை ரூபாய் ஒரு லட்சம் வழங்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்தது.

நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி எந்தவித நடைமுறையையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. ஆகவே அதே ஆணையத்தில் 28.03.2025 அன்று நிறைவேற்றுதல் மனு (EA 16/2025)

தாக்கல் செய்து நுகர்வோர் ஆணையம் எதிர்மறை தரப்புக்கு பிடிவாரண்ட் சம்மன் அனுப்பிய நிலையிலும், காவல் துறையினர் இது நாள் வரை UPCOT EV motors ஆட்டோ நிறுவனத்தாரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தாமல் உள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின் படி ஆட்டோ ஓட்டுநரிடம் இருந்து பழுதடைந்த ஆட்டோவை பெற்றுக் கொண்டனர் . ஆனால் பாரத ஸ்டேட் வங்கி அதிகாரிகள் ஆட்டோ தொழிலாளியிடம் மாத தவணை கட்ட வேண்டும் என்று நெருக்கடியில் ஆளாக்குகிறார்கள். ஆட்டோ ஓட்டுநர் மிகவும் மன உளைச் சலுக்கு ஆளாக்கியதோடு இத்தனை நாட்கள் வருமானம் இழந்து வாழ்க்கை வாழ்வதால் சாவதா என்ற நிலைக்கு மேற்கண்ட ஆட்டோ டீலர்கள் மற்றும் நிறுவனங்கள் என்னை தள்ளி விட்டார்கள் என தெரிவித்தார். நீதிமன்றம் உத்தரவு வழங்கி 16 மாதங்கள் ஆகியும் இதுநாள் வரை மாவட்ட நிர்வாகம் செவி சாய்க்காமல் ஆட்டோ ஓட்டுநரை அலையவிடும் அவல நிலை இருந்து வருகிறது.

மாவட்ட ஆட்சியர் இடமும் கடந்த மூன்று மாதங்களாக மனு அளித்து நிலையில் எந்த வித நடவடிக்கையும் எடுக்கதா காரணத்தினால் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகி இன்று போஸ்டர் உடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# "சபரிமலை செல்லும் பக்தர்கள் கவனத்திற்கு... தமிழகம் வழியாக சிறப்பு ரெயில்கள் இயக்கம்",

சென்னை, நவ.11–

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: காக்கிநாடா டவுன் கோட்டையம் இடையே வாராந்திர சிறப்பு ரெயில் (வண்டி எண்கள் 07109/07110) இயக்கப்படுகிறது. அந்த வகையில், காக்கிநாடா டவுனில் இருந்து நவம்பர் 17, டிசம்பர் 1, 8, 15, 22, 29, ஜனவரி 5, 12, 19 ஆகிய தேதிகளில் திங்கட்கிழமை மதியம் 1மணிக்கு இயக்கப்படும் இந்த சிறப்பு ரெயில் மறுநாள் மாலை 5.30 மணிக்கு கோட்டையத்தை சென்றடையும். மறுமார்க்கத்தில், கோட்டையம் டவுனில் இருந்து நவம்பர் 18, டிசம்பர் 2, 9, 16, 23, 30, ஜனவரி 6, 13, 20 ஆகிய தேதிகளில் செவ்வாய்கிழமை இரவு 8.30 மணிக்கு இயக்கப்படும் சிறப்பு ரெயில் மறுநாள் இரவு 11 மணிக்கு காக்கிநாடா டவுனை சென்றடைகிறது. தமிழகத்தில் இந்த ரெயில் காட்பாடி, ஜோலார்பேட்டை, சேலம், ஈரோடு, திருப்பூர் வழியாக இயக்கப்படுகிறது. இதேபோல், மராட்டிய மாநிலம் ஹஜூர் சாகிப் நாந்தேட் கொல்லம் இடையே வாராந்திர சிறப்பு ரெயில் (07111/07112) இயக்கப்படுகிறது. ஹஜூர் சாகிப் நாந்தேட்டில் இருந்து நவம்பர் 20ந் தேதி முதல் ஜனவரி 15ந் தேதி வரை வியாழக்கிழமைகளில் காலை 10 மணிக்கு இயக்கப்படும் சிறப்பு ரெயில், அடுத்த 3வது நாள் அதிகாலை 3 மணிக்கு கொல்லம் ரெயில் நிலையத்தை சென்றடைகிறது. மறுமார்க்கத்தில், கொல்லத்தில் இருந்து நவம்பர் 22ந் தேதி முதல் ஜனவரி 17ந் தேதி வரை சனிக்கிழமைகளில் காலை 5.40 மணிக்கு இயக்கப்படும் சிறப்பு ரெயில், அடுத்த நாள் இரவு 9.30 மணிக்கு ஹஜூர் சாகிப் நாந்தேட்டை சென்றடைகிறது. இந்த சிறப்பு ரெயில் தமிழகத்தில் காட்பாடி, திருவண்ணாமலை, விழுப்புரம், விருத்தாசலம், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சிவகாசி, ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம், சங்கரன்கோவில், கடையநல்லூர், தென்காசி, செங்கோட்டை வழியாக செல்கிறது. மேலும், தெலுங்கானா மாநிலம் சார்லபள்ளி கொல்லம் இடையே வாராந்திர சிறப்பு ரெயில் (07113/07114) இயக்கப்படுகிறது. சார்லபள்ளியில் இருந்து செவ்வாய்கிழமைகளில் நவம்பர் 18ந் தேதி முதல் ஜனவரி 13ந் தேதி வரை பகல் 11.20 மணிக்கு இயக்கப்படும் சிறப்பு ரெயில் மறுநாள் இரவு 10 மணிக்கு கொல்லத்தை சென்றடைகிறது. மறுமார்க்கத்தில், கொல்லத்தில் இருந்து நவம்பர் 20ந் தேதி முதல் ஜனவரி 15ந் தேதி வரை வியாழக்கிழமைகளில் அதிகாலை 2.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் மறுநாள் மதியம் 12.30 மணிக்கு சார்லபள்ளியை சென்றடைகிறது. தமிழகத்தில் இந்த ரெயில் காட்பாடி, ஜோலார்பேட்டை, சேலம், ஈரோடு, திருப்பூர் வழியாக செல்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.",

# "தென்காசி: காவலர் தேர்வில் செல்போன் பயன்படுத்தி மோசடி : 3 பேரிடம் விசாரணை",

தென்காசி, நவ.11–

தமிழகத்தில் நேற்று காவல்துறை 2ம் நிலை காவலர் பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு நடைபெற்றது. மாநிலம் முழுவதும் 45 மையங்களில் தேர்வு நடத்தப்பட்டது. இந்த தேர்வை எழுதுவதற்கு 2 லட்சத்து 24 ஆயிரம் பேர் விண்ணப்பம் செய்திருந்தனர். தேர்வு எழுத வந்தவர்களை காவலர்கள் பரிசோதனை செய்து தேர்வு எழுதும் மையத்திற்கு அனுப்பி வைத்தனர். முன்னதாக தேர்வு எழுத வருபவர்கள் ஹால் டிக்கெட், புகைப்பட அடையாள அட்டை மற்றும் கருமை நிற பேனா ஆகியவற்றை கட்டாயமாக எடுத்து வர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. மொபைல் போன், ஸ்மார்ட் வாட்ச், புளூடூத் ஹெட்போன் உள்ளிட்ட எலக்ட்ரானிக் சாதனங்களை எடுத்துவர அனுமதி மறுக்கப்பட்டது. இந்த நிலையில் தென்காசி மாவட்டம் இலஞ்சியில் அமைந்திருந்த தேர்வு மையத்தில், தேர்வு எழுதுவதற்காக வந்த கோபிகிருஷ்ணன் மற்றும் பாண்டியராஜ் ஆகிய இருவர் செல்போன் மூலம் வினாத்தாளை படம் பிடித்து, வெளியில் அனுப்பி பதில் பெற்று தேர்வெழுதியதாகவும், இவர்களுக்கு ஒரு பெண் உதவி செய்ததாகவும் கூறப்படுகிறது. இது குறித்து தகவலறிந்து போலீசார் சம்பந்தப்பட்ட 3 பேரை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். ",

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# சேலத்தில் மஞ்சள் நிறத்தில் ஸ்கூட்டரில் அது என்ன ஆடிப்போன எடப்பாடி.

## சேலம் ஓட்டலில் எல்லாரும் பார்த்தது என்ன?



சேலம். வ. 11–

சேலத்தில் பாம்புகள் அட்டகாசம் அதிகரித்து விட்டதாக தெரிகிறது.. பாம்புகளை பத்திரமாக மீட்டுவிட வேண்டும் என்று பொதுமக்கள் தொடர்ந்து அக்கறை எடுத்து வருகிறார்கள் என்றாலும், பாம்பின் மீதான அச்சமும், பயமும் மட்டும் இன்னும் விலகவில்லை.

நேற்று சேலம் மாவட்டம் எடப்பாடி பஸ் ஸ்டாண்டு அருகில் நடந்த சம்பவம் பெரும் பரபரப்பை தந்துவிட்டது.

வழக்கமாக, ஏப்ரல், மே மாதங்களில், வெயிலின் தாக்கம் பொதுமக்களை வாட்டி வதைத்து வரும்போது அந்த வெப்பத்திற்கு வன விலங்குகளும், பறவைகளும்கூட தப்ப முடிவதில்லை.

வெயிலின் தாக்கம் தாங்காமல் இருப்பிடத்தை விட்டு வெளியேறும் பாம்புகள் குடியிருப்பு பகுதிகளில் நுழைந்து விடுகின்றன.. எனவேதான், பாம்புகளை பார்த்ததுமே, அவைகளை பாதுகாப்பாக பிடித்து அப்புறப்படுத்திவிட வேண்டும் என்று பொதுமக்களே நினைக்கிறார்கள்.. இதற்காகவே தீயணைப்பு துறை வீரர்கள் அல்லதுபாம்புபிடி வீரர்களையும் நாடுகிறார்கள்.

தீயணைப்பு துறை வீரர்களிடம், பாம்பினை பிடிக்கும் நவீன கருவிகள் இருப்பதால், பாம்புகளை பிடித்து பாதுகாப்பாக வனப் பகுதியில் விட்டுவிடுகிறார்கள். எனினும், கோடை காலங்களில் குடியிருப்பு பகுதிகளுக்கு பாம்புகள் வருவது வழக்கமாக இருக்கும் நிலையில் இப்போதெல்லாம் குளிர்காலத்திலும் பாம்புகள் வருவது அதிர்ச்சியையும், கலக்கத்தையும் தந்துவிடுகின்றன.

அதிலும்சேலம்மாவட்டத்தில் பாம்புகள் தொல்லை அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.. 4 நாளைக்கு முன்பு சேலம் ஆத்தூரில், சந்திரா என்பவரின் வீட்டின் பின்புறமுள்ள மரத்தில் விநோத சத்தம் கேட்டுள்ளது.. இதனால் சந்திரா அது என்னவென்று சென்று பார்த்தபோது, ஓணானை விழுங்கிய நிலையில் பச்சை கலரில் பாம்பு இருப்பதை பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளார். உடனே ஆத்தூர் தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தந்த, 4 அடி நீள பாம்பை உயிருடன் மீட்டனர்.

அதேபோல கெங்கவல்லி அருகே கூடமலை ஊராட்சி, தெற்கு காட்டுக்கொட்டாயை சேர்ந்த விவசாயி ராஜேந்திரனின் 7 அடி மலைப்பாம்பு உயிருடன் மீட்கப்பட்டது நினைவிருக்கலாம்.

இதோ இப்போது மீண்டும் சேலம் மாவட்டத்தில் ஒரு அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது.. எடப்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்டது வெள்ளாண்டி வலசு.. இந்த பகுதியில் வசித்து வருபவர் முத்து.. இவருக்கு 55 வயதாகிறது.. டூவீலர் டீலராக உள்ளார். இதற்காக அதே பகுதியில் வாகனங்கள் விற்பனை செய்யும் கடையையும் வைத்துள்ளார்..

இந்நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை எடப்பாடி பஸ் ஸ்டாண்டு அருகில் உள்ள ஓட்டலுக்கு சாப்பிடுவதற்காக வந்திருந்தார். அவர் கடை வாசலில் தன்னுடைய ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு கடைக்குள் சென்றிருந்தார்..

அப்போது அங்கு திடீரென தரையில் ஊர்ந்தபடியே பாம்பு ஒன்று வந்துள்ளது.. அந்த பாம்பு ஓட்டல் வாசலில் நின்று கொண்டிருந்த முத்துவின் ஸ்கூட்டருக்குள் புகுந்துவிட்டது.. மதிய நேரத்தில் பாம்புவை சாலையில் பார்த்ததுமே அப்பகுதி பொதுமக்கள் அலறி அடித்து கத்திக்கொண்டே ஓடினார்கள்..

உடனே இது குறித்து எடப்பாடி தீயணைப்பு நிலையத்திற்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு படை வீரர்கள் பாம்பை மீட்க முயன்றனர்.. ஆனால், ஸ்கூட்டரின் உட்பகுதிக்குள் பாம்பு சென்றுவிட்டதால் அதை உடனடியாக மீட்க முடியவில்லை..

பிறகு நீண்ட நேரம் போராடி ஸ்கூட்டருக்குள் பதுங்கி இருந்த விஷ பாம்பை பிடித்தனர்... பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள குடியிருப்பு பகுதியில், அதிலும் மதிய நேரத்தில் விஷ பாம்பு நடமாடுவது கண்டு, அந்த பகுதி மக்கள் பீதியிலும், அச்சத்திலும் உறைந்துள்ளனராம்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421